Registered as a Newspaper    மலர் 04    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் நாளிதழ்    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    தை 20    (02.02.94)    புதன்கிழமை    ஓசை 349

யாழ்ப்பாணம்

## வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு நாளுக்கு 655 லட்சம் செலவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தமானது நாளொன்றுக்கு 655.9 லட்சம் ரூபாவை விழுங்கி வருகிறது. இதற்கு மணித்தியாலத்திற்கு 47,565 ரூபாவும் நிமிடமொன்றுக்கு 793 ரூபாவும் செலவாகிறது என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. இது இலங்கையின் வருடாந்த மொத்த வருமானத்தில் 12 வீதமாகும். இதேவேளை கடந்த ஆண்டில் மட்டும் 8000க்கும் மேற்பட்ட படையினர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளதாகவும், இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பெரிய அளவில் மேற்கொள்ள முயற்சித்தும் அது கைகூடவில்லை என்றும் அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

# போரை நிறுத்தி பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வுகாண்க!

## குடும்பமொன்றிற்கு 4 லீற். மண்ணெய் விநியோகம்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா நான்கு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாளை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'மாகோ' கப்பலில் 6500 பரல் மண்ணெண்ணெய் ஏற்றிவரப்படுவதாகவும், இது வந்துசேர்ந்ததும் உடனடியாகவே விநியோக வேலை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 4500 பரல் மண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 1000 மெ. தொன் சீனி உடன் அனுப்ப கோரிக்கை

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் நிலவும் சீனித் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக உடனடியாக ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை அனுப்பி வைக்குமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் புனர்வாழ்வு அமைச்சிற்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு திட்டப் பணிப்பாளர் அனுப்பியுள்ள அவசர செய்தி ஒன்றில் பருத்தித்துறை நோக்கி வரவுள்ள எந்தவொரு கப்பலிலேனும் உடனடியாக மேற்குறிப்பிட்டளவு சீனியை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டுள்ளார். (ச, சி)

## லயனல் பெர்னாண்டோ இவ்வாரம் யாழ். வருவார்

- சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் லயனல் பெர்னாண்டோ இவ்வாரம் யாழ்ப்பாணம் வர இருப்பதாக நேற்றைய ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவரின் யாழ், பயணத்தின் போது யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவார் என்றும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள யுத்தக்கைதிகளைப் பார்வையிடுவதுடன் அவர்களின் விடுதலை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

இவர் யாழ், வருவதற்கு முன்னர் சிங்கள அரசியல் தலைவர்களையும் இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைச் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு தேர்தலை

## அமெரிக்க அமைப்பு கோரிக்கை

[வாஷிங்டன்]

**இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாணும் எண்ணத்தை கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முற்படுமாறு அகதிகளுக்கான அமெரிக்க அமைப்பொன்று கோரிக்கை விடுத்துள்ளது.**

இவ் அகதிகளுக்கான அமெரிக்க அமைப்பானது நேற்று வாஷிங்டனில் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரியுள்ளது. இவ் அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காணலாம் என்பதை கைவிடும்படியும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முற்படும்படியும் கோரியுள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பிரச்சினைக்கு தீர்வுகாண மத்தியஸ்தத்திற்கு தயார்

மெதடிஸ்த திருச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக சமாதானத் தீர்வு காண்பதற்கு வசதியாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு மெதடிஸ்த திருச்சபை தயாராக இருப்பதாக இத் திருச்சபை அறிவித்துள்ளது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் கடந்த ஆண்டு இறுதியில் கொழும்பில் நடைபெற்ற மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த மாநாட்டில் எடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இத் தீர்மானம் குறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது. மேற்படி தீர்மானம் குறித்து அரசுத்தரப்புக்கு மெதடிஸ்த திருச்சபை தெரியப்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோக பூர்வ அறிவிப்பு 3 வருடத்தில் 3683 படை பலி

1991 முதல் 1993 வரையிலான காலப்பகுதியில் 3683 படையினர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு 1211 படையினரும் 1992 இல் 1135 படையினரும், 1993 நவம்பர் 11 ஆம் திகதி வரை 1337 படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். 1990 இல் இறந்த படையினரின் எண்ணிக்கையை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை. 1990 ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கோட்டை முகாம், கொக்காவில் முகாம், மாங்குளம் முகாம் ஆகிய முகாம்களை பலத்த உயிரிழப்புகளுடன் சிறிலங்கா இராணுவம் இழந்தது.

இதேவேளை கொழும்பில் வெளிவரும் பத்திரிகை ஒன்று கடந்த மூன்று ஆண்டுகளில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 5000க்கும் மேல் எனத் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் இருந்த இராணுவ அதிகாரி கொத்தலாவலயின் நடவடிக்கை மீது கொழும்பு பத்திரிகை சந்தேகம்

(கொழும்பு)

அமெரிக்காவில் திருட்டுச் சம்பவத்துடன் சம்பந்தப்படுத்தி குற்றஞ்சாட்டப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் லெப். சேணல் ஜெயந்த கொத்தலாவல அமெரிக்காவில் இருந்த காலத்தில் கனேடிய நகரங்களிற்கும் சென்று வந்ததாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கொத்தலாவல அமெரிக்க

பிரசுரித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் முன்னதாக கடந்த டிசம்பரில் கொத்தலாவல இத்தாலி செல்வதற்கு சிறிலங்கா அதிகாரிக

போது யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவார் என்றும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள யுத்த திலைவர்களையும் இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைச் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்வதற்கு மெதடிஸ்த திருச்சபை தயாராக இருப்பதாக இத் திருச்சபை அறிவித்துள்ளது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்த மத்தியஸ்த முயற்சிகளை மேற் தீர்மானம் குறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது. மேற்படி தீர்மானம் குறித்து அரசுத்தரப்புக்கு மெதடிஸ்த திருச்சபை தெரியப்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தேர்தலை குழப்ப புலிகள் முயற்சி

(கொழும்பு)

மார்ச்சில் கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை குழப்புவதற்காக விடுதலைப் புலிகள் கிழக்கு நோக்கி நகர்வதாகவும் கடல் மார்க்கமாகவும் கிழக்கு மாகாணத்திற்கு புலிகள் வந்து சேர்ந்ததாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதனால் இராணுவ அதிகாரிகள் நிலைத்தலை வராகவும் கூடுதல் பொறுப்பை ஏற்றுள்ள கிழக்கு பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கொழும்பில் நடைபெற்ற பதவி ஏற்பு வைபவத்தை தொடர்ந்து உடனடியாகவே கிழக்கிற்கு திரும்பிவிட்டதாகவும் அப் பத்திரிகை கூறுகிறது.

பல்வேறு பிரிவுகளில் இருந்தும் சேர்க்கப்பட்ட விசேட பொலிசார் கிழக்கில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி முகாம் விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டமைக்கு ஆட்சேபம்

(கொழும்பு)

பூநகரி கூட்டுத்தளம்மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய இராணுவ விசாரணைககுழு அவ் அறிக்கையை வெளியிட்டமை குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இரகசியமாக வைக்கப்பட்டிருக்க வேண்டிய இவ் விடயம் வெளியிடப்பட்டமை குறித்து விசாரணை நடத்த குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என அவ் அதிகாரிகள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவிடம் கோரியுள்ளனர்.

மேற்படி அறிக்கை உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட முன்னர் முழுமையாக வெளியிடப்பட்டு விட்டதெனவும் எனவே இது இராணுவ

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அமெரிக்காவில் திருட்டுச் சம்பவத்துடன் சம்பந்தப்படுத்தி குற்றஞ்சாட்டப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் லெப். கேணல் ஜெயந்த கொத்தலாவல அமெரிக்காவில் இருந்த காலத்தில் கனேடிய நகரங்களிற்கும் சென்று வந்ததாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கொத்தலாவல அமெரிக்க போர்ட் பென்னிவ் இராணுவக் கல்லூரியில் இருந்த காலத்தில் கனேடிய நகரங்களான மொன்றியலுக்கும் ரொரன்ரோவிற்கும் சென்றதாகவும் அங்குள்ள தமது உறவினர்களையும் மற்றும் இலங்கையைச் சேர்ந்த பல தரப்புகளுடனும் சந்தித்துப் பேசியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலங்கையரின் பத்திரிகை ஒன்று லெப். கேணல் கொத்தலாவலயின் குறிப்பாக விடுதலைப் புலிகள் தொடர்பான தொடரான பேட்டிகளை பிரசுரித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் முன்னதாக கடந்த டிசம்பரில் கொத்தலாவல இத்தாலி செல்வதற்கு சிறிலங்கா அதிகாரிகளிடம் அனுமதி கேட்டபோது அது மறுக்கப்பட்டதாகவும் இலங்கையில் நடவடிக்கைப் பகுதிகளில் இவரின் பிரசன்னம் அவசியமாக இருந்தமையினாலேயே அவரின் இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை கூறுகிறது

இதனிடையே தன்மீது சுமத்தப்பட்ட கைமோசத் திருட்டு தொடர்பான குற்றச்சாட்டை லெப். கேணல் கொத்தலாவல மறுத்துள்ளமை தெரிந்ததே. தாம் கொழும்பு திரும்புவதற்கான

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒருநாளைக்கு ஒருநேர உணவு இளவாலை மக்கள் அவலம்

(வடமராட்சி)

இளவாலை முகாமில் சிறிலங்கா இராணுவத்தினர் எங்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவைக் குறைத்து எங்களை வதைத்தனர். தற்போது ஒருநேர உணவு மட்டுமே கிடைக்கிறது.

### விடுவிக்கப்பட்ட வயோதிபர் தகவல்

இவ்வாறு இளவாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டிருந்து விடுவிக்கப்பட்டு யாழ். வந்த கண் பார்வையிழந்த கந்தையா சிதம்பரப்பிள்ளை எமது வடமராட்சிச் செய்தியாளருக்கு மனம் நொந்து போன நிலையில் கண்ணீர் சிந்தியவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த போது, ஆரம்பத்தில் எமக்கு ஓரளவு உணவு கிடைத்து வந்தது உண்மை தான். ஆனால் போகப் போக எங்களுக்கு ஒரு நேரத்திற்கான உணவு தான் கிடைக்கும். அதுவும் கூட போதுமானதல்ல பசியெடுக்கும் நேரம் எல்லாம் தண்ணீரையே தஞ்சமாக்கிக் கொள்வோம்.

ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு நாற்பது ரூபாவுக்கான சாமான்கள மட்டுமே தரப்படுகிறது என்றால் எப்படிப் பசியாற முடியும் என்று அந்த கண் தெரியாத முதியவர் எமது செய்தியாளரிடம் கேட்டார்.

எங்கள் முகாமில் உள்ள இராணுவத்தினர் எங்களால் உணவு தொடர்ந்தும் தரமுடியாது. நீங்கள் உங்கள் ஊருக்குப் போங்கள் என்று எங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட ஐவர் நேற்று வந்து சேர்ந்தனர்

(வடமராட்சி)

இளவாலை, தையிட்டி பகுதிகளில் சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ஐவர் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

நான்கு வயோதிபர்களும் ஒரு யுவதியும் உட்பட ஐவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் 'கோமாரி' கப்பல்மூலம் கூட்டி வந்தனர்.

வல்லிபுரம் கணபதிப்பிள்ளை (வயது68 சங்கானை) கந்தையா சிதம்பரப்பிள்ளை (வயது68 சங்கரத்தை) இவர் பார்வையிழந்தவர். கன்னிப்பிள்ளை பொன்னம்பலம் (வயது72 தையிட்டி) இவரது மனைவி பொன்னம்பலம் முத்தாச்சி (வயது 70) ஆகியோரும், கொழும்பிலிருந்து இளவாலைக்கு வந்து யாழ். வர அனுமதி மறுக்கப்பட்டு இளவாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருபெண் ஆகியோரேவந்தவர்களாவர்.

நடக்க முடியாத நோயாளிகளான இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் வாகனம் மூலம் கூட்டி, வந்து உறவினரிடம் ஒப்படைத்தனர். (யோ)

### வீரச்சாவு



**2ம்லெப். நெடியோன்**

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலின்போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் நெடியோன் (கோவிந்தன் கேதீஸ்வரன்- இரண்டாம் கண்டம் முத்தையன் கட்டு-முல்லைத்தீவு) இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பயிற்சிக்கு வரும் படை அதிகாரிகள் குடும்பத்தை அழைத்து செல்ல தடை

### அமெரிக்க அதிகாரிகள் விதிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவிற்கு இராணுவப் பயிற்சி பெறவரும் இராணுவ அதிகாரிகள் இனிமேல் தமது குடும்பத்தினர் சகிதம் வரமுடியாது என அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்காக இவ்வாண்டு தெரிவான சிறிலங்கா இராணுவத்தின் மேஜர் அருணா ஜெயதிலகாவிற்கு இவ்வாறு அமெரிக்க தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள போர்ட் பென்னிங்கில் உள்ள அமெரிக்க சர்வதேச இராணுவக் கல்வி மற்றும் பயிற்சித்திட்டத்தில் காலாட் படை அதிகாரிக்கான பயிற்சிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கடந்த வாரம் மேஜர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பு தமிழர் நிலங்கள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்ட புதூர் விமான நிலைய விஸ்தரிப்புக்கென தமிழரின் நிலங்கள் அரசினால் அபகரிக்கப்படுகின்றன.

1982ஆம் ஆண்டு புதூர் விமான நிலைய விஸ்தரிப்புக்கென பெருமளவு பரப்புநிலம் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. இதனால் 330 தமிழர்கள் காணிகளை இழந்துள்ளனர். இதுதவிர 56 அரசகட்டடங்களும் சுவீகரிக்கப்பட்டன. சுவீகரிப்பு நடந்து நாற்பது மாதங்களாகியும் இதுவரை காணிச்சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத்தொகை அரசினால் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1992ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின்படி மேலும் விஸ்தரிப்பு செய்வதாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் அமுல் செய்யப்படும் பட்சத்தில் பலஇந்து ஆலயங்கள், புதுநகர் மகாவித்தியாலயம் புளியந்தீவு சேமக்காலை முற்றாக அழிக்கப்படுவதுடன், பழம்பெருமைவாய்ந்த வனையிறகுக் கிராமம் முற்றாக மறைந்து புதுநகர்க் கிராமத்தின் ஒரு பகுதியும் முற்றாக அழிக்கப்படலாம் என்று அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# வரி விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6வது மைல்கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி, (7380)

## அராலியூர் சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர். அவரது நாடகங்களைப் பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். 'கெட்டிக்காரர்கள்', 'முதலாம்பிள்ளை' 30/- (7368)

## மருந்தாளர் (பார்மஸிட்) பயிலுநர் வகுப்பு

வெளிக்கள மருந்தாளர் பயிலுநர் வகுப்புகள் 5-02-94 சனிககிழமை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. முழு விபரங்கட்கும் நிர்வாகியைத் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி. ஞானக்குழந்தை இல்லம், 49/5 யாழ். றோட், யாழ்ப்பாணம். (சி-8494)

## காய்கறித் தோட்டம்

வதிவிட வேளாண்மை, காய்கறித்தோட்ட விருத்தியின் அவசியம் கருதி மில்க்வைற் விவசாய உற்பத்திகள் விலை குறைப்பு. சக்தி பசளை (கூட்டெரு) பக்கற் ஒன்று ரூ. 7/-. 5 கிலோ விலை 65/- 20 கிலோ ரூ. 240/-. ''மார்க்ஷோசின்'' பூச்சிகொல்லி போத்தல் ஒன்று ரூ. 90/-. மொத்த கொள்வனவுக்கு கவர்ச்சியான கழிவு, மில்க்வைற். (சி-8495)

## மிருதங்கம்

N. C. O. M S. பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க வேலைகள் விரைவில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (7350)

## தவறவிடப்பட்டது

31-01-94 அன்று அச்சுவேலி பஸ்ஸிலிருந்து அரசடி, கந்தர்மடத்தில் இறங்கும் போது அடையாள அட்டை 2

# ஒக்டோபரில் மட்டும் அதிக இளைஞர் கைது

### சிங்கள தினசரி தகவல்

(கொழும்பு)

1993ஆம் ஆண்டில் படையினரால் கைதான தமிழ் இளைஞர்களில் சுமார் 3890 பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என சிங்களத் தினசரி ஒன்று குறிப்பிட்டுள்ளது. 1993இல் ஒக்டோபர் மாதத்திலேயே அதிகமான இளைஞர்கள் கைதாகியுள்ளனர். அதிலும் கொழும்பில் கைதானோர் தொகை கணிசமான அளவ உயர்ந்துள்ளது எனவும் 'ஹிரு' எனும் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# மருந்தற்ற மரக்கறி பெற வதிவிடவேளாண்மைசெய்க

மருந்துகள் மற்றும் இரசாயனங்கள் கலக்கப்படாத மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வதிவிடங்களில் வேளாண்மை செய்யுங்கள் என்று விவசாய போதனாசிரியர் திருமதி சாந்திகுமார் தெரிவித்துள்ளார்.

வதிவிட வேளாண்மைப் போட்டி தொடர்பாக அண்மையில் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நல்லூர் வட்டத் தொடர்பாளர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்து அவர் உரையாற்றினார். அத்துடன் வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகியவை தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிராம சேவை உத்தியோகத்தர்கள், கால்நடை சுகாதாரதிணைக்கள உத்தியோகத்தர். பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோருடன் பெருமளவு விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

## ஆசிரியர் பயிற்சி

1994-ம் ஆண்டு வாழ்க்கைத்திறன் கல்வியைப் புதிதாக ஆரம்பிக்கவுள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 4, 5, 6, 19. 20 திகதிகளில் யா/மட்டுவில் ஸ்கந்தபுர ஸ்கந்தவரோதய ம. வி.யில் தினமும் காலை 8. 30 முதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

# அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில்

## பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக்குருக்கள்

அவர்களின்

## சேவை நலம் பாராட்டு விழா

மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினரும், தொண்டர் சபையினரும், பொது மக்களும் இணைந்து குருக்கள் ஐயா அவர்களை 18. 2. 94 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோவிலில் பாராட்டி கௌரவிக்க தீர்மானித்துள்ளனர். இவ்விழா சிறப்புற நடைபெற பொதுமக்கள் தங்களால் இயன்ற பண உதவியை ஆலய செயலகத்தில் 15-2-94 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அன்பாக கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
மேற்படி விழா சபையினர்

அளவெட்டி.
1-2-94

(7387)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASSES

ஆரம்பமாகியுள்ளன (8A.M—2P.M)

பொருளியல்: திரு. க. கலாகரன்
கணக்கியல்: திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம்: திரு. T. வரதன்

ஏனைய பாடங்களும்

- கடந்தகால வினாக்கள்; மாதிரி வினாக்கள்; மீட்டல் என்பன குறிப்புகளுடன் செய்யப்படும்.
- திறமைமிக்க பட்டதாரி ஆசிரியர்களின் சேவையை வழங்கும் ஒரே நிறுவனம் இதுவே.
- உடன் அனுமதிகளைப் பெறவும். (சி-8486)

# பேராதனைப் பல்கலைக்கழக

(வெளிவாரிப் பட்டப்படிப்பு)

## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பட்டப்பாட நெறிகளுக்கான; விண்ணப்பங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன.

- கலைமாணி (B.A.)
- விஞ்ஞானமாணி (B.Sc) புள்ளிவிபரவியல்


க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி. அத்துடன் மொத்தப் புள்ளியாக 180 பெற்றவர்கள் மட்டுமே கலைமாணி பட்டப்படிப்புக்கு பதிவுசெய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர். ஏனையவற்றிற்கு மேற்குறிப்பிடப்பட்ட தகைமை இல்லை. அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்கட்கு
உதவிப்பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் மாணவர்கள் 20-2-1994க்கு முன்னர் தங்களது அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். குறிப்பிடப்பட்ட தி

# 3-ம் ஆண்டுநினைவலைகள்



அன்னையின் மடியில்:
17 07-1969

மண்ணின் மடியில்:
05.02.1991

## மேஜர் சிறி

(கதிர்காமத்தம்பி ராஜசிறி -ராஜன்)

திதி: 02-02-94

கவிதைகள் பல இயற்றியும்—கவலைகள் தீரவில்லை
கதைகள் பல கூறியும்—காரியம் முடியவில்லை
நீள்கின்றது எம் மண்ணில் மரணம்
—அதில் உந்தன் வீரச்சாவும் நிலைத்ததடா
ஆண்டுகள் மூன்றென்ன ஆயிரம் சென்றாலும்
ஆருயிர்ச் செல்வமே ராஜன்
நாம் உன்னை மறப்போமா.

(05-02-91 அன்று தச்சன்காட்டில் இவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய வேங்கைகளுக்கும் எம தஞ்சலிகள்.)

# நினைவு கூருகின்றோம்..

## 1994-02-02

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-சஞ்சி குடிச்சாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டின்பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ஞானி** (செல்லத்துரை பாக்கியநாதன் - பாடசாலை வீதி, திராய்க்கேணி - அம்பாறை)

1989ஆம் ஆண்டு வவுனியா - கொம்புவைத்தகுளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜெரி** (புவனகாந்தன் பேரின்பநாதன் - சாம்பல்தீவு திருமலை)

**செட்டி** (துரைராஜா ரமேஷ்பாபு - வேப்பங்குளம் வவுனியா)

மன்னார் - கட்டையடம்பன் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சேகர்** (ஞானசம்பந்தர் சின்னத்தம்பி - பாலம்பிட்டி மடுக்கோயில் - மன்னார்)

**லெப். ரூபன்** (கந்தையா கந்தசாமி1-ம்வட்டாரம் மண்டைதீவு - யாழ்)

யாழ் - பல்கலைக்கழக வளாகச் சந்தியில் இந்தியப்படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான-

**தனபாலசிங்கம் சத்தியேந்திரா** (யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்)

**சின்னத்தம்பி ஜெகநாதன்** (யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)

முல்லை - ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப்படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்-

1991ஆம் ஆண்டு திருமலை - மூதூர், இலக்கந்தைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக எமது மிதிவெடியில் சிக்கிய நிலையிற் சயனைட் உட்கொண்டதில் எமைப் பிரிந்த-

**2 ம் லெப். பரம்** (வேலாயுதம் மோகனதேவன் முட்டுச்சேனை - திருமலை)

யாழ்-மாவிட்டபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கோவிந்தபிள்ளை விஜய குமார், 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(7350)

## தவறவிடப்பட்டது

31-01-94 அன்று அச்சுவேலி பஸ்ஸிலிருந்து அரசடி, கந்தர்மடத்தில் இறங்கும் போது அடையாள அட்டை, பிறப்பத்தாட்சிப் பத்திரம், வங்கி ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவற விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(7390)

## உலர்உணவு விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது வாடிக்கையாளரிற்கு 1993ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்கான இறுதி இருவார உலர் உணவை அதன் நிவாரணக் கிளைகளினூடாக விநியோகித்து வருகிறது. இந்த இருவாரத்திற்கான உலர் உணவுப் பொருள்களாக அரிசியும், கோதுமைமாவு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.
(88)

## மீனவருக்கு நிவாரணம்

கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறித்த விபரப்பட்டியல் அரசாங்கத்திற்கு கிடைத்த பின்னரே மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடல் வலயச் சட்டத்தினால்பாதிக்கப்பட்ட மீனவர்கள் பற்றிய விபரப்பட்டியலை அனுப்புமாறு சிறிலங்கா அரசாங்கம் செயலகத்தையும், மீனவர் ஒன்றியங்களையும் கேட்டிருந்தது. இப்பட்டியல் கிடைத்த பின்னரே நிவாரணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாக மீனவர்கள் தமது சுயதொழிலை இழந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் அடுத்த வாரம் முதல் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் செயலகப் பிரிவுகளில் நடைபெற்று வருகிறது. (யோ)

## பட்டப்படிப்புகள் கல்லூரி


148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் மாணவர்கள் 20-2-1994க்கு முன்னர் தங்களது அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். குறிப்பிடப்பட்ட திகதிக்குபின் வரும் விண்ணப்பங்கள் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ் நகரில் இதுவே."

(சி-8487)

## 1-ம் ஆண்டின் நினைவலைகள்



தாயின் மடியில்:
25-10-1975

மண்ணின் விடிவில்:
02-02 1993

### 2 ம் லெப். தங்கவேல் (தாமு)

முருகேசு தனபாலசிங்கம் (கணேஸ்)
(சார்ள்ஸ் அன்ரனி விசேட படைப்பிரிவு)

மறைந்தும் மறையாத மாவீரா தாமுவே
அன்னை மண்தனைக் காப்பேன் என
அளவிலா உறுதி பூண்டு
அண்ணன் காட்டிய பாதை சென்றுநீ
அடைந்தாயே பெருமை பல
மாதகல் மண்ணதனில்
மடையர் பல எதிரிகளை
ஆவென்று அலற வைத்த ஆருயிர் தாமுவே
பாரினிலே வெற்றி மழை பாடிவரும்வேளையிலே
நீயில்லை நாம் கண்டு நித்தம் மகிழ்ச்சியுற.

குடும்பத்தினர்.

(7382)

—அதில் உந்தன் வீரச்சாவும் நிலைத்ததடா
ஆண்டுகள் மூன்றென்ன ஆயிரம் சென்றாலும்
ஆருயிர்ச் செல்வமே ராஜன்
நாம் உன்னை மறப்போமா.


(05-02-91 அன்று தச்சன்காட்டில் இவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.)

உன் பிரிவால் தவிக்கும்
தாய், சகோதரர்கள்,
மருமக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

காவல்துறை வீதி,
சாவகச்சேரி.

(5086)

## 31-ம் நாள் நினைவலைகள்



### செல்வன் இராஜதுரை இராசேஸ்வரன்

(தெல்லிப்பளை யூனியன் கல்லூரி உயர்தர பழைய மாணவன்)

அன்னை மடியில்
26-08-1968

இறைவன் அடியில்
03-01-1994

கல்வியிலே கடலானாய்
பழக்கத்திலே பண்பானாய்
மறக்கவில்லை உன் நினைவை
மாளுகின்றோம் உன் பிரிவால்.

நாவற்காடு
அச்சுவேலி

தங்கள் பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர்
(7277)

முல்லை - ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்-

1991ஆம் ஆண்டு திருமலை - மூதூர், இலக்கந்தைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக எமது மிதிவெடியில் சிக்கிய நிலையிற் சயனைட் உட்கொண்டதில் எமைப் பிரிந்த-

**2 ம் லெப். பரம்** (வேலாயுதம் மோகனதேவன் முட்டுச்சேனை - திருமலை)

யாழ்-மாவிட்டபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வாமதேவன்** (இராசலிங்கம் ஜெய்சங்கர் - தட்சணாமருதமடு- மன்னார்)

**சந்திரன்** (சின்னையா குணசேகரம் - பாரதிபுரம் மேற்கு-கிளிநொச்சி)

**செந்தில்** (செல்லப்பா சுரேஷ்குமார் - தஞ்சட்டி, அளவெட்டி வடக்கு-யாழ்)

கிளி-ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பிரகாஷ்** (குணநாயகம் கேதீஸ்வரன்- 22,வன்னேரிக்குளம்-கிளி)

1992ஆம் ஆண்டு அம்பாறை - சவளக்கடைப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாககுதலின்போது வீரச்சாவெய்திய-

**சதாநேசன்-யூலி** (பாப்பாக்குட்டி தவராசா சேனைக்குடியிருப்பு-02-மட்டு)

மட்டு-அம்பிளாந்துறைப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர், மற்றும் தேசவிரோதக்குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழிளைஞர்கள்.

1993ஆம் ஆண்டு யாழ் - கடற்கரைவீதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது எம்மவர்கள் பதுங்கியிருந்து நடாத்திய அதிரடித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். தேனமுதன்-காளிதாஸ்** (மணிராசா லோகிதராசா - தம்பிலுவில்- அம்பாறை)

**லெப். இறைஞன்-கலெக்சன்** (அன்ரனி கணேஸ் - 2-ம் குறிச்சி ஆரையம்பதி - மட்டு)

**லெப், நெடுமாறன்-சாந்தன்** (வேலாயுதம்பிறேம் குமார்-சாரதாவீதி, - திருமலை)

**கப்டன் செழியன்-பாரத்** (செபஸ்தியாம்பிள்ளை மனோகரன்-பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**2-ம் லெப். தங்கவேல்-ராமு** (முருகேசு தனபாலசிங்கம் - கலட்டி அம்மன்கோயிலடி - யாழ்)

**2-ம் லெப். மகிழ்ச்செல்வன்.லெனின்** (சண்முகலிங்கம் நிமலேஸ்வரன் - கல்வியங்காடு - யாழ்)

வவுனியா - ஓமந்தைப் பகுதியிற் சிறிலங்கா விமானப்படையினரின் அகோரகுண்டுவீச்சினால் கொல்லப்பட்ட மட்டுநகரைச் சேர்ந்த 2 பொதுமக்கள், ஓமந்தையைச் சேர்ந்த ஒரு பொதுமகனுமாக 03பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(ஐ-8493)

சிந்தனைக்கு

அறத்தைப் புகழ்வோர் பெரும்பாலும் அதைப்போற்றிப் பின்பற்றுவதில்லை

—ஜான்மில்டன்—

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

## பருவகால மழைபோல்..

வருடத்தில் இருமுறை சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமைகள் பற்றியும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பற்றியும் பேசிக் கொள்வதுண்டு. அதில் ஒன்று மனித உரிமைகள் தொடர்பாக ஜெனீவாவில் ஐ. நாவின் கூட்டம் நடைபெறும் காலகட்டம். இரண்டாவது சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும் காலகட்டம். இக்காலகட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பாகவும், இனப்பிரச்சினை தொடர்பாகவும் புதிய அறிவிப்புக்களை சிறிலங்கா அரசு வெளி விடுவதுண்டு.

இந்தவகையில், இவ்வருடம் மனித உரிமைகள் மாநாடு தொடர்பாக வெளிவந்த அறிவிப்புக்களில் ஒன்றை சிறிலங்கா பிரதம மந்திரியும், மற்றையதை ஜனாதிபதியின் செயலாளரும் விடுத்துள்ளனர். இதில், பிரதம மந்திரி விடுத்துள்ளது இனப்பிரச்சினை தொடர்பானது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் தயாராகவுள்ளது, விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் இது என்பதே பிரதமரின் அறிவிப்பாகும்.

இரண்டாவது, ஜே. வி. பி. காலத்தில் தென்னிலங்கையில் நடைபெற்ற படுகொலைகள் குறித்து விசாரிக்க விசாரணைக்குழு அமைக்கப்படும் என்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் செயலாளரின் அறிவிப்பாகும்.

இவை இரண்டும் பருவகால மழை போன்றவை. வருடா வருடம் வருபவை. ஆனால், இவை பற்றி எவரும பெரும் சிரத்தை கொள்வதில் எதுவித அர்த்தமும் இருப்பதாக இல்லை, ஆனால், ஒரு சிறு விடயம் தென்னிலங்கைக் கொலைகள் தொடர்பான அம்சத்தில் சுட்டிக் காட்டப்படக் கூடியதாக உள்ளது. சிலவேளை இது புதிய திருப்பமாகவும் இருக்கலாம்.

அதாவது, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இடம்பெற்றதான படுகொலை விவரங்கள் தற்பொழுது எலும்புக்கூட்டு உருவில் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் தொடர்ச்சியாக ஏற்படப்போகும் இச் சமாச்சாரத்திற்கு விசாரணைக் குழுவை நியமித்ததன் மூலம் பிரச்சினையை டி. பி. அரசாங்கம் திசை திருப்பி விடலாம். பிரேமதாசா காலத்துக் கொலைகளைஅவரின் தலையிலேயே சுமத்தி விடுவதால் தற்பொழுது ஆட்சியில் உள்ளவர்களின்கைஇரத்தக்கறைபடியாதவை எனக்

## பிரிட்டிஷ் தூதுவர் இன்று வவுனியாவிற்கு

(கொழும்பு)

சிறீலங்காவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் என். ஜே. ஷீல்ட் இன்று வவுனியா வருகிறார். இவருடன் தெற்காசிய திணைக்கள பொறுப்பாளர் திரு. திருமதி பாணி சிமித் ஆகியோரும் வருகின்றனர்.

வன்னி இராணுவ இணைப் பதிகாரி நலன்புரி நிலையங்கள், மீளக்குடியேறும் பகுதிகள், தாண்டிக்குளம் தடைமுகாம் ஆகியவற்றிற்கு இவர் விஜயம் செய்து நிலைமைகளை அவதானிப்பார் எனவும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான விடயங்களிலும் அக்கறை செலுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மலேரியா ஒழிப்பிற்கு மலத்தீனுக்காக ஐக்கோன்

(கொழும்பு)

மலேரியா நுளம்பை ஒழிப்பதற்கு மலத்தின் மருந்து தெளிப்பதை விடுத்து அதற்கு பதிலாக ஐக்கோன் என்னும் ஒரு புதிய மருந்தை சுகாதார திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது.

மலேரியா நுளம்புகளை ஒழிப்பதற்கு சுகாதார திணைக்களம் மலத்தின் மருந்தை வழங்குகின்றது. அது நெல் வயல்களிலுள்ள பூச்சி புழுக்களை அழிப்பதற்கு விவசாயிகளின் கைக்கு சென்று அடைவதினால் மலேரியா நுளம்புகளை அழிப்பதற்கான திணைக்களத்தின் முயற்சி முழுமையான வெற்றி அளிக்கவில்லை என அது நடத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதனையடுத்தே மலததீன் பாவனை நிறுத்தப்பட்டு ஐக்கோன் என்னும் மருந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## தன்னிறைவைத் தாண்டிய உப்பு உற்பத்தி

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழத்தின் உப்பு உற்பத்தித் தொழில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளால் புது வளர்ச்சி பெற்றதோடு, சுயதேவையில் தன்னிறைவைத் தாண்டி அடுத்த ஆண்டுக்கான தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்யக்கூடிய கையிருப்பையும் கொண்டுள்ளது.

போரின் ஆரம்ப கட்டத்தில் கிலோ 30ரூபா வரையில் விலை போன உப்பு உள்ளூர் உற்பத்தியினால் தற்போது கிலோ10ரூபாவாக குறைந்துள்ளது சிலவிற்பனைநிலையங்களில்ஒன்பது ரூபாவுக்கும்விற்கப்படுகின்றது.

குறைந்த விலையில் சில்லறை விற்பனை செய்யக் கூடியதாக உப்பின் மொத்த விலை விநியோகம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள போதிலும் பல்வேறு இடங்களில் பலவிதமான விலைகளில் உப்பு விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தியான உப்பு தாராளமாகக் கையிருப்பில் இருப்பதால் தென்னிலங்கையில் இருந்து உப்பைக் கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ளது.

### பழைய மாணவர் கூட்டம்

வட்டுக்கோட்டை இந்துக்

ஜெனீவா செல்லும் குழுவிற்கு

## பிரிகேடியர் விஜேசேகராவை இராணுவம் பிரேரிக்கவில்லை

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமை குழு மாநாட்டிற்கு செல்லும் சிறிலங்கா குழுவில் ஓய்வுபெற்ற பிரிகேடியர் தயா விஜேசேகராவை இராணுவத் தலைமையகமோ, பாதுகாப்பு அமைச்சோ பிரேரிக்கவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி ஜெனீவா செல்லும் குழுவில் பிரிகேடியரின் பெயர் எவ்வாறு சேர்க்கப்பட்டது என வெளி விவகார அமைச்சு கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சிடம் விளக்கம் கேட்டிருந்தது. இதையடுத்து இந்தப் பிரிகேடியரின் பெயர் எவ்வாறு இணைக்கப்பட்டது என்ற விபரம் இப்போது மர்மமாக உள்ளது. குழுவில் பிரிகேடியர் விஜேசேகராவின் பெயர் சேர்க்கப்பட்டிருந்ததை ஜனாதிபதி செயலக அதிகாரி கண்டுபிடித்தனர். அவரின் பெயரை நீக்குமாறு ஜனாதிபதியும் உத்தரவிட்டார்.

பிரிகேடியர் விஜேசேகரா பாதுகாப்பு அமைச்சினதோ இராணுவத் தளபதியினதோ அனுமதியைப் பெறாமல் இக் குழுவில் இடம்பெறத் தமது பெயரைக் கொடுத்திருந்தாரா என்பது குறித்து இராணுவத் தலைமையகம் இப்போது விசாரணையை ஆரம்பித்துள்ளது. பிரிகேடியர்விஜேசேகராவிற்கு எதிராக ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## கைதடி வைத்திய ஊழியர் கஷ்டப் படிபெற முயற்சி

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்களுக்கு இன்று வரை எதுவிதக் கஷ்டநிவாரணப்படியும், கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என இவ்வைத்தியசாலை சகலதர ஊழியர்களும் ஆழ்ந்த கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

இங்கு கடமையாற்றும் உயர்தர அதிகாரிகள் பல தடவை கடிதமூலமும், கொழும்பில் உள்ள தலைமைச் செயலகத்துடனும் நேரிலும் தொடர்பு கொண்டும் ஒருவித பலனும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என விசனம் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது இப்பணத்தைத் தமக்குப் பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருடன் நேரில் தொடர்பு கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## முழுநாடுமே வெடிகுண்டாக மாறிவருகிறது - அத்தாவுட

(கொழும்பு)

முழு நாடுமே இன்று ஒரு வெடி குண்டாக மாறியுள்ளது. எனவே எதிரணித் தலைவர்களுடன் கலந்து பேசி இனபபிரச்சினைக்கு விரைவில் அரசு ஒரு தீர்வைக் காணவேண்டும் என ஐக்கிய சோசலிச முன்னணி எம்.பி அத்தாவுடசெனிவிரட்ன வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் நிலவுவது பயங்கரவாதமா இனப்பிரச்சினையா என்பதைப்பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் இருப்பது பயங்கரவாதமே என்று ஒதுக்கித்தள்ள முடியாது, அதற்கு அரசியல் மற்றும் இராணுவம் கலந்த தீர்வு ஒன்று அமைய வேண்டும் என இராணுவத் தளபதி கூறியுள்ளார். எனவே அரசு இவ்விடயம் குறித்து உறுதியான கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்.

அமைச்சர் பதவி பறிபோய் விடுமென்று அஞ்சி இனப் பிரச்சினை பற்றி எவரும் பேசுவதில்லை. இந்தியா, ஐரோப்பா அல்லது ஐ. நா தலையிடும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? நாடு இரண்டாவதை தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்படும் சகல முயற்சிக்கும் எமது பூரண ஆதரவுண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா. மனித உரிமை மாநாடு

## ஜெனீவா செல்லும் குழுவில் பிரிகேடியர் பெயர் நீக்கம்

அமைச்சு நடவடிக்கை

ஜெனீவாவில் ஆரம்பித்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தில் சிறிலங்காவிலிருந்து கலந்துகொள்ளவிருப்போர் பட்டியலில் பிரிகேடியர் தயா விஜேசேகராவின்பெயர் எவ்விதமாக இடம்பெற்றது என்பதை விசாரிக்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஏ சி எஸ், ஹமீட் வெளிவிவகார ராஜாங்க அமைச்சரான ஜோன் அமரதுங்கவை கேட்டுள்ளார். இதனையடுத்து பிரிகேடியரின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

ஒன்றில் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருந்தார் இவரின் பெயர் உத்தியோக பூர்வ பத்திரங்களில் நீதி அமைச்சு அதிகாரி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது மேற்படி தூதுக் குழுவில் சட்டமா அதிபர் திலக் மாரப்பன, ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், சிரேஷ்ட அரச சட்டத்தரணி ரொட்றிகோ, வெளிவிவகார அமைச்சின் செல்வி அருணி தேவராஜா ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

## காமினியின் சுவரொட்டி அகற்றிய லலித்ஆதரவாளர்

கொழும்பு நகரில் ஒட்டப்பட்டிருந்த காமினி திஸ்ஸநாயக்காவின் சுவரொட்டிகளை அகற்றிக் கொண்டிருந்த இரு படியினால் அவர்களை பின்னர் பொலிசார் விடுவித்து விட்டனர்.

காலத்தில் இடம்பெற்றதான படுகொலை விபரங்கள் தற்பொழுது எலும்புக்கூட்டு உருவில் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் தொடர்ச்சியாக ஏற்படப்போகும் இச் சமாச்சாரத் திற்கு விசாரணைக் குழுவை நியமித்ததன் மூலம் பிரச்சினையை டி. பி. அரசாங்கம் திசை திருப்பி விடலாம். பிரேமதாசா காலத்துக் கொலைகளைஅவரின் தலையிலேயே சுமத்தி விடுவதால் தற்பொழுது ஆட்சியில் உள்ளவர்களின்கைஇரத்தக்கறைபடியாதவை எனக் காட்ட முற்படலாம். அதாவது, பிரேமதாசா காலத்து கொலைகளை அவருடனேயே முடித்துவிட எண்ணலாம்.

ஆனால், அப்படுகொலைகளில் பெரும்பங்கு அவருக்கு இருப்பதாக இருப்பினும், தனியாகப் பழியை அவர் மீது போடுவது எந்தளவிற்கு பொருத்தப்பாடானது? அன்று பிரேமதாசாவிற்கு ஆதரவு அளித்தவர்கள், அவரின் நிழலில் நின்று செயற்பட்டவர்கள், அவரின் நடவடிக்கையின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் எனச் சகலருக்குமே அதில் பங்குண்டு. இந்தவகையில், பிரேமதாசா காலத்தில் அவருக்கு அடுத்ததாகப் பல பதவிகளையும், உயர் அதிகாரங்களையும் கொண்டிருந்த தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் அதில் பங்குண்டு.

இவ்விடயம் ஒருபுறம் இருக்க, கடந்த கால அனுபவங்களை நோக்கும்போது சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் அறிவிப்புக்களுடன் நின்று கொள்வதே வழமையாகும். கடந்த வருடத்தில் கூட மனித உரிமைகள் மாநாட்டிற்கு முன்னர் அவசரகாலச் சட்ட விதிகளை தளர்த்தியதாக அறிவித்திருந்த அரசாங்கம் பின்னர், சிறிது காலத்தின் பின் மீண்டும் அமுல்படுத்தியதோடு. புதிய விதிகள் சிலவற்றையும், பாதுகாப்பு வலயப் பிரகடனங்களையும் செய்தது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகள் மறைமுகமான தொன்றாகவோ. இரகசியமாக மேற்கொள்ளப்படுவதாகவோ இல்லை பகிரங்க அறிவிப்புக்கள் மூலமே மேற் கொள்ளப்படுகின்றன. இந்த நிலையிலும். மனித உரிமைக் குழுக்களும் சிறிலங்காவிற்கு; உதவி வழங்கும் நாடுகளும், சிறிலங்கா அரசின் விளக்கங்களையும், ஒப்புவிப்புக்களையும் ஏற்றுக் கொள்வதும், நிதி வழங்கச் சிபார்சு செய்வதும் தான் வேடிக்கையானதும், வருத்தம் தருவதும் ஆகும்.

இந்தவகையில், இம் மனித உரிமைக் குழுக்களும் உதவி வழங்கும் நாடுகளும் இதனை விளங்காமல் நடந்து கொள்கின்றனவா? அன்றி தெரிந்திருந்தும் உலக மக்களை ஏமாற்றும் நோக்கில், சிறிலங்காவுடன் கூட்டாகச் செய்கின்றனரா என்பதே கேள்வியாகும். ஆனால், மனித உரிமை ஸ்தாபனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் விளங்கிக் கொள்ளாமற் செய்வதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், அவர்களுக்குப் பின்னால் உள்ள சக்திகள் உலகைத் தமது கைக்குள்வைத்திருப்பதற்கான சகல யுக்திகளையும் கையாள்பவை ஆகும் அவர்கள் உலகின் போக்கை தீர்மானிக்க முற்படுபவர்கள்.

---

யப்பட்டுள்ள போதிலும் பல் வேறு இடங்களில் பலவிதமான விலைகளில் உப்பு விற்பனை செய்யப்படுவது அவ

---

என்பதை விசாரிக்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஏ சி எஸ். ஹமீட் வெளிவிவகார ராஜாங்க அமைச்சரான ஜோன் அமரதுங்கவை கேட்டுள்ளார். இதனையடுத்து பிரிகேடியரின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டது.

கடந்த பல வருடங்களாக மேற்படி கூட்டங்களில் பங்குபற்றி வந்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி நிஹார ரொட்றிகோவிற்குப் பதிலாக பிரிகேடியர் விஜேசேகராவின் பெயர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஓய்வு பெற்ற பிரிகேடியர் பாதுகாப்புப் பிரிவு

---

## பழைய மாணவர் கூட்டம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கல்லூரி அதிபர் திரு. என். ஜெயநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

---

# மட்டக்களப்பு வன்செயல் 5650 பேருக்கு நட்டஈடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களினால் மரணமடைந்தோருக்கு நட்ட ஈடு நிவாரணம் வழங்குமாறு கோரி விண்ணப்பித்தவர்களில் 5650 பேர் மரணநட்டஈட்டைபெறத்தகுதி பெற்றுள்ளனர். ஏற்கனவே இவர்களில் 3085 பேர் நட்டஈட்டை பெற்றுள்ளனர்.

இதே போன்று உடல் ஊனமுற்றவர்களுக்கும் நட்டஈடு கோரி விண்ணப்பித்தவர்களில் 4730 பேர் நிவாரணம் பெற தகுதிபெற்றுள்ளனர்.

---

# யாழ் மாவட்டத்தில் மலேரியா கடந்த வருடத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சென்ற வருடம் மலேரியாவின் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ளதாக மலேரியாத் தடுப்புப் பிரிவினரின் அறிக்கையொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. இதே வேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா பொதுவான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் யாழ். மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த மலேரியா நோயாளர்கள் 16,160 என்றும் இதில் சாதாரண மலேரியாவினால் பாதிக்கப்பட்டோர் 14,939 பேர் எனவும் மூளை மலேரியாவினால் பாதிப்புற்றோர் 1221 பேர் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். ஆகக் கூடிய மலேரியா நோயாளர் 6063 பேர் பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவில் கண்டுபிடிக்கப் பட்டனர். இதில் சாதாரண மலேரியா 5513, மூளை மலேரியா 550 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை யாழ் மாநகர சுகாதார அத்தியட்சகர் பிரிவில் 4783மலேரியா நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டனர். இதில் 4302 சாதாரண மலேரியாவும், 480 மூளை மலேரியா நோயாளிகளும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளனர்.

சென்ற வருடம் ஏப்பிரல் மாதம் முதல் மலேரிய எதிர்ப்பு நடவடிக்கையில் யாழ் மாவட்டத்தில் அதிகாரிகள் ஈடுபடாமையினால் மலேரியா நோய் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாகோ கப்பலில் கொண்டு வரப்பட்ட ''மலத்தீன்'' வடமராட்சி கிழக்குப் பகுதியில் உடனடியாகத் தெளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் சென்ற வருடம் இந்த நோயினால் பீடிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கையெடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (நி)

---

# காமினியின் சுவரொட்டி அகற்றிய லலித்ஆதரவாளர்

கொழும்பு நகரில் ஒட்டப்பட்டிருந்த காமினி திஸ்ஸநாயக்காவின் சுவரொட்டிகளை அகற்றிக் கொண்டிருந்த இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் காலஞ்சென்ற லலித் அத்துலத் முதலியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிககப்படுகிறது. அவர்களில் ஒருவர் அத்துலத் முதலியின் முன்னாள் மெய்க்காவலர்; மற்றையவர் அத்துலத் முதலியின் அலுவலகத்தில் பணியாற்றியவர்.

சுவரொட்டிகளை அகற்றிக் கொண்டிருந்த இவர்களை காமினியின் மகனான நவீனின் மெய்க்காவலர்கள் அவ்வீதி வழியாக வாகனத்தில் சென்றபோது கண்டதாகவும் இருவரையும் கைது செய்து கொள்ளுப்பிட்டி பொலிசில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மீது பாரிய குற்றச்சாட்டுகள் ஏதுமில்லாதபடியினால் அவர்களை பின்னர் பொலிசார் விடுவித்துவிட்டனர்.

---

கொண்டிருக்கிறீர்களா? நாடு இரண்டாவதை தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்படும் சகல முயற்சிக்கும் எமது பூரண ஆதரவுண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

# தமிழகம் புலிகளை ஒடுக்க மத்திய அரசு உதவும்

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க மாநில அரசு சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்துள்ளார். நேற்று மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை குறித்து முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் அவர் பேச்சு நடத்தினார். இதன் பின் செய்தியாளர்களிடையே மத்திய அமைச்சர் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும். மத்திய அரசு உறுதியளித்தபடி அனைத்து நவீன ஆயுதங்களையும் வழங்கியுள்ளது. தமிழக கடற்கரையின் பாதுகாப்பிற்காக இரு கடற்படை பிரிவுகள் மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.

தென் மாநிலங்களில் கடந்த சில மாதங்களில் பாகிஸ்தான் உளவு நிறுவனம் ஐ. எஸ்.ஐ நடவடிக்கை அதிகரித்திருப்பது குறித்து முதலமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டது இது குறித்து கருத்து பரிமாற்றமும் செய்யப்பட்டது. இவ்வமைப்பின் நடவடிக்கையை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் மத்திய அமைச்சர் பைலட் கூறினார்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை விரைவில் அனுப்பி வைப்பதுடன் இலங்கையிலிருந்து இந்தியா வருவோரின் விசாக்களையும் நன்கு பரிசீலிக்கவேண்டும் என முதலமைச்சர் என்னிடம் கூறினார். இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் ஆலோசிக்கப்படும் என அமைச்சர் ராஜேஷ் பைலட் மேலும் தெரிவித்தார்.

---

# கொலைக்கு காரணமான அரசுக்கு நிதி உதவி

## அமெரிக்க தினசரி சாடல்

(வாஷிங்டன்)

1988க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 60,000 மக்கள் இராணுவத்தினரால்கொல்லப்பட்டனர். அப்போது அதிகாரத்திலிருந்த கட்சியே இப்போதும் சிறிலங்காவில் ஆட்சியில் உள்ளது. இவ்வாறு ஸ்ரீவன்கெல் என்பவரின் நூலிலிருந்து எடுக்கப்பட்டு வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கால கட்டத்தில் கொல்லப்பட்டவர் எத்தனை பேர் என்பது எவருக்கும் சரியாகத் தெரியாது. இனியும் தெரியப் போவதில்லை. இன்று வரை இக்கொலைகளுக்காக யாரும் நீதிக்கு முன் நிறுத்தப் படவுமில்லை இன்று அதிகாரத்திலிருக்கும் அதே கட்சி அன்று அதிகாரத்தில் இருந்த நேரத்தில் சிறிலங்காவிற்கு பெருமளவு வெளிநாட்டு நிதி உதவி வாஷிங்டனின் வெளிநாட்டு வகுப்பு அதிகார பீடங்களிலிருந்து கிடைத்த வண்ணமிருந்தது எனவும் அக்கட்டுரை கூறுகிறது.

# உத்தியோக கடமைகளுக்கு. செல்ல மாட்டுவண்டியாவது தாருங்கள்

## மன்னார் அரச அதிகாரி அரசிடம் கெஞ்சல்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ கடமைகளுக்கு பயன்படுத்த மோட்டார் வாகனம் ஒன்றை பெற நான்கு வருடங்களாக பெரு முயற்சி எடுத்தும் பலன் ஏற்படாத நிலையில் மன்னார் மாவட்ட அதிகாரி ஒருவர் மாட்டு வண்டியையாவது தாருங்கள் என அமைச்சர் முன்னிலையில் மன்றாடினார்.

அமைச்சர்கள் குழு ஒன்று கடந்த வாரம் மன்னார் தீவிற்கு வந்தது. மன்னார் கச்சேரியில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

எனது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்ற பல இடங்களுக்கு செல்லவேண்டியுள்ளது. வாகனம் ஒன்றைப் பெற நான்கு வருடங்களாக முயற்சித்து சோர்ந்து விட்டேன். சில சமயம் வாகனம் ஒன்றை இரவலாக பெறுவதற்கு பல திணைக்களங்களுக்கு சென்று கெஞ்சவேண்டியிருக்கிறது.

எனவே எனக்கு மாட்டு வண்டி தந்தாலாவது கடமைகளை நிறைவேற்ற உதவியாக இருக்கும். மன்னாரில் பெற்றோல் தட்டுப்பாடும் உள்ளதால் இதுவே சிறந்ததாக இருக்கும் என அவர் அமைச்சர் குழுவிடம் கூறினார்.

# சாத்வீக அடிப்படையில் ஜே. வி. பி. போராடும்

## லண்டன் கிளை அறிவிப்பு

(லண்டன்)

அரசியலில் உள்ள அனைத்து வன்முறைகளையும் எதிர்ப்பதாக ஜே. வி. பியின் லண்டன் அலுவலகம் அறிவித்துள்ளது. முதலாளித்துவ அரசுக்கு எதிராக ஜே.வி.பி அமைப்பு 'சாத்வீக எதிர்ப்பையே' தீவிரமாக கைக்கொள்ளும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பி கிளர்ச்சி மோசமாக ஒடுக்கப்பட்டு நான்கு வருடங்களின் பின்னர் ஜே.வி. பியின் லண்டன் அலுவலகத்திலிருந்து அதன் செயலர் சந்திரான கிளாரன்ஸ் பீரிஸ் என்பவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலில் வன்முறையை ஐ. தே. கவே புகுத்தியது எனக் குற்றஞ்சாட்டும் ஜே. வி. பி மக்களின் நிலை கருதி ஜே. வி. பி வன்முறையை கைவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள ஜே. வி. பி கிளை அலுவலகம் அண்மையில் அதன் 15ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகம் தொடர்ச்சியாக நடாத்திவரும் கருத்தரங்குத் தொடர் வரிசையில் ''இந்து சமுத்திர விருத்தியும் இலங்கையின் தோற்றமும்'' என்னும் தலைப்பில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் அவர்களால் புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இல. 02 இல் இன்று பி, ப. 3.00 மணியளவில் நடைபெறும்.

## சென்றொக்ஸ் முதலிடம்

யாழ். மாநகரசபைசன சமூக நிலையங்களின் சமாசம் சனசமூகங்களிடையே நடாத்திய கலை இலக்கிய போட்டிகளில் குருநகர் சென்றொக்ஸ் சனசமூக நிலையம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

# ஐ. தே. கவிற்காக உழைத்த பின்பே காமினிக்கு அமைச்சர் பதவி

ஐ. தே. கவில் இணைந்துள்ள காமினி திசநாயக்கா பாராளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவியை ஏற்க சிலகாலம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த காத்திருக்கும் காலப்பகுதியில் காமினி ஐ. தே. கவிற்காக உழைக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. கவின் எந்த தேசியப் பட்டியல் எம். பியும் காமினிக்கு இடமளிக்கும் வகையில் பதவி விலகுமாறு கோரப்படமாட்டார்கள் எனவும் அடுத்த பொதுத் தேர்தல் வரையில் காமினி காத்திருக்க வேண்டியிருக்கலாம் என முக்கிய ஐ. தே. க வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# காமினி திசநாயக்கா தலைமைத்துவ தகுதியற்ற ஒருமனிதர்

## சிறிமானி அத்துலத்முதலி கூறுகிறார்

''காமினி திசநாயக்கா தலைமைத்துவ தகுதியற்ற மனிதர்; அவர் கட்சி தாவிய போதிலும் மக்கள் ஆதரவுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முன்னோக்கிச் செல்லும்'' இவ்வாறு திருமதி சிறிமானி அத்துலத்முதலி சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

காமினிதிசநாயக்கா எமது கட்சியின் தலைமைப்பதவியை பெற்றபோது அவரை ஆதரிக்குமாறு நான் ஆதரவாளர்களை அறிக்கை மூலம் கோரியிருந்தேன் காமினி இப்போது ஐ.தே.கவில் இணைந்திருப்பது அவருக்கு தலைமைத்துவ இயல்பு இல்லை என்பதை உறுதியாக்கியுள்ளது அவரால் கட்சியை முன்னோக்கி நகர்த்த முடியாது என்பது தெரிந்துள்ளது எனவும் சிறிமானி அத்துலத்முதலி கூறினார்.

ஜ ஐ.தே.மு கட்சியினரை காமினி ஐ.தே.கவில் இணைப்பதை தடுக்க உங்களால் முடியுமா எனக் கேட்கப்பட்டபோது கட்சியை எவரும் கடத்திவிட முடியாது என்றார் திருமதி அத்துலத்முதலி. நிதிவளம் இல்லாது கட்சியை காப்பாற்ற முடியுமா எனக்கேட்டபோது ''எனது கணவர் ஜ.ஐ.தே.மு தலைவராக இருந்தபோது கூட காமினியின் நிதியுதவியில் தங்கியிருக்கவில்லை. மக்கள் ஆதரவே தேவை என்றார் சிறிமானி அத்துலத்முதலி ஜி.எம். பிரேமச்சந்திரா ஜ.ஐ.தே.மு கட்சியில் தொடர்து இருப்பதற்கு நீங்கள் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்வதை தடுப்பதற்கே என்று கூறப்படுகிறது என கேட்ட போது வதந்தியை வதந்தியாகவே கொள்வோம் என பதிலளித்தார் திருமதி அத்துலத்முதலி.

லலித்தின் ஆதரவாளர்கள் சிலர் காமினியின் மெய்காவலர்களினால் அண்மைக்காலத்தில் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி அத்துலத்முதலி குறிப்பிட்டார்.

# மட்டு. காந்திநகர் கிராமம் படையினர் சுற்றிவளைப்பு

## விவசாயி கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காந்திநகர் பிரதேசத்தைத் திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் விவசாயி ஒருவரை கைதுசெய்து முகாமுக்குக் கொண்டுசென்றனர்.

கடந்த 27ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் மட்டக்களப்பு பாவற் கொடிச்சேனை, கண்ணகி நகர் முகாம் இராணுவத்தினர் காந்திநகர் வயல் பிரதேசத்தில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த ச. வடிவேல் (வயது 38) என்ற ஐந்துபிள்ளைகளின் தந்தையையே கைது செய்து முகாமுக்குக்கொண்டு சென்றுள்ளனர்.

இவரைத்தேடி உறவினர் இராணுவ முகாமிற்கு சென்றபோது மேற்படி நபரை தாம் கைது செய்யவில்லை எனவும் அதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனவும் இராணுவத்தினர் கூறியுள்ளனர்-

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 08.01.1933

உதிர்வு: 02.01.1994

கணபதிப்பிள்ளை வெற்றிவேல்

(முன்னைநாள் கணக்காளர்)

அன்புடனும் பாசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்.

மரணச் சடங்கில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்

# இல. அகதிகள் படகுகளை மீளக் கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

1990 ஜூன் மாதத்தின் பின் மன்னார், பேசாலை பகுதிகளிலிருந்து இந்தியா சென்ற அகதிகளின் மீனவப் படகுகளை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து வெளியுறவு அமைச்சு இந்திய அரசுடன் பேச்சு நடத்திவருகிறது.

இந்தியா சென்ற அகதிகள் கப்பல் மூலமாக இப்போது திரும்பியுள்ளனர். இவர்கள் சென்ற படகுகள் தமிழ்நாடு கரையோரத்தில் நிற்கின்றன 114 படகுகள் இயந்திரங்கள் சகிதம் நல்ல நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு

நிறுத்தப்பட்டுள்ளனர், தேர்தல் நடைபெறும் என்பதை உறுதி செய்வதே இராணுவத்தின்பணியாகஉள்ளது,

## குடும்பம்

ணெண்ணெய மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் எனவும், ஏனைய 2000 பரல் மண்ணெண்ணெயும் விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மண்ணெண்ணெய்க் குரிய பணத்தை செயலக புனர்வாழ்வுப் பிரிவில் காசோலையாகச்

## பயிற்சி

ஜெயதிலகாவிற்கு அமெரிக்க விசா வழங்கப்பட்டபோது அவரிடம் அமெரிக்க தூதரக அதிகாரிகள் அவரின் மனைவியும் இரு பிள்ளைகளும் அமெரிக்காவிற்கு கூட வர முடியாதுஎன அறிவுறுத்தினர்.

## பூநகரி

உயர் கட்டமைப்பில் அதிகாரிகளுக்குள் பலசிக்கல்களை ஏற்படுத்தும் எனவும் அவ் அதிகாரிகள் ...

# இ.தொ.கா. கூட்டம் மீதான தடையுத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் தேசியசபை கூட்டத்தை நடத்தக்கூடாது எனகொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவை எதிர்வரும் 11ஆம் திகதிவரை நீடிப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

இ. தொ. கா. பொதுச்செயலர் எம். எஸ். செல்லச்சாமி தாக்கல்செய்தமனுவையடுத்து மேற்படி தடை உத்த... சபையை அல்லது நிர்வாக சபையை கூட்டவோ நடத்தவோ கூடாதுஎன இத்தடை உத்தரவு கூறுகிறது.

## ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தின் உலங்குவானூர்தி ஒன்று ஐம்பது கலிபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மீன் பிடித்துக் கொண்டு ...

## திங்கள் முதல் நிவாரணம்

(நமது நிருபர்)

இடம்பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண விநியோகம் எதிர்வரும் திங்கள் முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். செயலகப் பிரிவு அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தோருக்குரிய ஜனவரி மாத நான்கு கட்ட நிவாரணங்களும் ஒரே தடவையில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரிசி, சீனி, பருப்பு, தேயிலை, ...

வளர்த்து சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்.

மரணச் சடங்கில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
பிரம்படி லேன், மனைவி, பிள்ளைகள்.
கொக்குவில். (7389)

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு

### 03-02-1994

### அமரர் சங்கரன் கிருஷ்ணன்

(கம்பர்மலை)

தோற்றம்: 28-03-1916 மறைவு: 25-12-1993

உழைப்பால் உயர்ந்து பாசத்தின் திருவுருவாய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் "அந்தியேட்டிக் கிரியை" நாளை (03.02.1994) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரது கம்பர்மலை இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி:- திருமதி அன்னம்மா கிருஷ்ணன்

மக்கள்:- ரூபசௌந்தரி, ரஞ்சிதமலர், ராஜேந்திரன் (U. K.), புவனேஸ்வரலிங்கம் (CANADA), பாஸ்கரதாஸ் (U.K.)

மருமக்கள்:- கே. தங்கவடிவேலு (இளைப்பாறிய ஆசிரியர்), எஸ். நடேசன், திருமதி ஆர். ஜெயராணி திருமதி பி. பிரேமாவதி

பேரப்பிள்ளைகள்:- முரளிதாஸ் (டென்மார்க்), சௌந்தரதாஸ் (டென்மார்க்) ராதா B. Sc (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) சுஜாதா B. Sc, சுரேந்திரதாஸ் (U. K.), சுரதா (கொழும்பு), ஜெபரூபன், தினேஸ்ரூபன் (U. K.), ஜெபராஜன், நிலானி, சுபானி (CANADA), தங்கேஸ்வரி, கலாமோகன் (U. K.),

பூட்டி:- மதுரினி (டென்மார்க்)

தகவல்:-
கம்பர்மலை, திரு. திருமதி தங்கவடிவேல் ரூபசௌந்தரி
வல்வெட்டித்துறை. (7388) (மகள்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மண்ணெண்ணெய்க் குரிய பணத்தை செயலக புனர்வாழ்வுப் பிரிவில் காசோலையாகச் செலுத்தியபின் தமக்குரிய மண்ணெண்ணெயை பருத்தித்துறையில் வைத்து நேரடியாகப் பெற்றுச் செல்லலாம் என புனர்வாழ்வு பிரிவு அறிவித்துள்ளது. (ச, சி)

### ஒரு நாளை

களை இறுதியாகக் கூறி அனுப்பினர்.

என்னை இராணுவம் கைது செய்யும்போது நான்கண்பார்வையுள்ளவனாக இருந்தேன். அங்கு ஏற்பட்ட சுகாதாரச் சீரின்மை, சத்தில்லாத உணவு, எண்ணெய்வகைகள் இல்லாததினால் கண்பார்வையை இழக்க நேரிட்டது மட்டுமல்ல சலவியாதியும் ஏற்பட்டது.

இங்கு வந்திருக்கின்ற நாங்கள் எல்லோரும் ஒருவகையான நோய்க்கு இலக்காகி நோயாளிகளாகவே மாறிவிட்டோம் என்றார். (யோ)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

**FACULTY OF MEDICINE**

The clinical appointments to all students of the 13th batch (1990/91 batch) will commence on 14-02-1994.

Registrar.

(சி-8497)

முடியாதுள்ள அறிவுறுத்தினர்.

### பூநகரி

உயர் கட்டமைப்பில் அதிகாரிகளுக்குள் பலசிக்கல்களை ஏற்படுத்தும் எனவும் அவ் அதிகாரிகள் ஜெரி டி சில்வாவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகவலை "லங்காதீப" பத்திரிகை வெளியிட்டுள்ளது.

### போரை

இதேவேளை, சிறிலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தைகளைநடத்த முன்வர வேண்டும் எனவும் கோரியுள்ளது.

### பிரச்சினைக்கு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு சக்திகளின் முயற்சிகளை அரசுத் தரப்பு நிராகரித்ததைத் தொடர்ந்து மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக மெதடிஸ்த திருச்சபை தீர்மானித்துள்ளதுடன் இம் மத்தியஸ்த முயற்சியில் ஆர்வமுடைய எவரும் தம்முடன் இணைந்து கொள்ள முடியும் என்றும் மெதடிஸ்த திருச்சபை பகிரங்க அழைப்பு ஒன்றையும் விடுத்துள்ளது. (க), (நி)

நீடிப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

இ. தொ. கா. பொதுச் செயலர் எம். எஸ். செல்லச்சாமி தாக்கல்செய்தமனுவையடுத்து மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர் மனுதாரரான இ. தொ. கா. தலைவர், உபதலைவர் ஆகியோர் மனுதாரரான செல்லச்சாமிக்கு ஊடாக வன்றி இ. தொ. கா. தேசிய

### கொத்தலாவலையின்

ஆவணங்களை பெறுவதில் சில சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் ஆவணங்களைப் பெற்றதும் தாம் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொத்தலாவல அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இருந்து தற்போது வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடமையின் நிமித்தம் தான் ஒருவருடைய வீட்டைச் சோதனை செய்ததாகவும் அப்போது அங்கிருந்து சுடும் ஆயுதம் ஒன்றையும், கிரனைட் ஒன்றையும், வாக்கிடோக்கி ஒன்றையும் கைப்பற்றியதாகவும் இதுவே தன்னைப்பற்றிய தவறான செய்தி வெளியிடப்பட்டமைக்கு காரணம் எனவும் கொத்தலாவல மேலும் தெரிவித்தார்.

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01-02-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 531

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

27-493, 27-7756, 27-2088, 27-2004, 20-8515. 27-9492, 26-6842, 26-6461, 26-5712, 26-6628 26-4896, 24-4465, 24-878, 28-4255, 41-9997 41-9579, 41-9989, 40-6979.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3294, 24-4367, 42-1464, 26-6062, 27-8283 41-4176, 42-1320, 26-4691, 26-7353, 43-4170 26-1285, 41-9652, 41-9327, 24-5886, 40-1516 24-5815, 26-6775, 26-6029, 27-6439, 28-4545 26-2391, 24-9856, 42-3927.

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தின் உலங்குவானூர்தி ஒன்று ஐம்பது கலிபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மீன்பிடித்துக் கொண்டு கரைக்குச் சென்ற படகுகள் மீதே இத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இடம்பெயர்ந்தோருக்குரிய ஜனவரி மாத நான்கு கட்ட நிவாரணங்களும் ஒரே தடவையில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரிசி, சீனி, பருப்பு, தேயிலை, பூடு, புளி ஆகியவை இம்முறை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (ச, சி)

## காமினியை கண்டிக்கும் நூல்வெளியிட முடிவு

ஐ. தே. கவில் காமினிதிசநாயக்கா இணைந்துள்ளமை கடுமையாக கட்சியினுள் எதிர்த்து வரும் ஐ. தே. க உறுப்பினர் சிலர் காமினியை சாடும் நூல் ஒன்றை வெளியிடவுள்ளனர்.

ஐ. தே. கவிற்கு வெளியே காமினி இருந்த சமயத்தில் கட்சிக்கு எதிராக அவர் பொது மேடைகளில் பேசிய பேச்சுக்கள் அடங்கிய தொகுப்பை அவர்கள் நூல் வடிவில் வெளியிடவுள்ளனர். கடந்த மாகாணசபை தேர்தலுக்கு முன்பாக ஐ. தே. கவை அழிக்க ஒற்றுமைப்படுமாறு எதிர்க்கட்சிகளை காமினி கோரிய பேச்சும் இதில் இடம் பெறுகிறது.

## மருத்துவ பீட மாணவர் மாடியிலிருந்து குதிப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒருவர் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துள்ளதாக நேற்றைய திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பம்பலப்பிட்டிமாடி வீட்டில் இருந்த மருத்துவபீட மாணவர் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## காமினியின் சேவை ஐ. தே. கவிற்கு தேவை

### அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

காமினி திசநாயக்கா மீண்டும் ஐ. தே. கவில் இணைந்துள்ளதை அமைச்சர் தொண்டமான் வரவேற்றுள்ளார். திறமைகள் பல உள்ள அவரின் சேவை அரசாங்கத்திற்கு நன்மைகள் தரும் என அவர் கூறியுள்ளார்

எனது இந்தக் கூற்றை ஆதரிப்பதாகவே காமினியை மீண்டும் ஐ. தே. கவில் சேர்த்துக்கொள்ள எடுக்கப்பட்ட முடிவு காட்டுகிறது. காமினிக்கு மத்திய மாகாண சபையில் தொண்டமான் ஆதரவுதெரிவித்ததால் இ. தொ. காவினுள்எழுந்த சர்ச்சைகள் குறித்து கருத்து தெரிவித்த தொண்டமான் அது அனைத்தும் நடந்து முடிந்துவிட்டது. அரசியலில் உயர்வும் தாழ்வும் வழமையானது தான் என்றார்.

காமினி திசநாயக்கா கட்சியினுள் சேர்ந்துள்ளமை குறித்து ஐ. தே. கவினுள்ளேயே கருத்து வேறுபாடுகள் நிலவுவது குறித்து கருத்து வெளியிட்ட அவர் நன்மை ஏதும் நடந்தால் அதற்கு எப்போதும் எதிர்ப்புகளும் இருக்கவே செய்யும் என்றார்.